[2019 பிப்ரவரி 13

67—

கால்நடை மருந்தகம்

***41780—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணச்சநல்லூர் தொகுதி, சணமங்கலம் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சணமங்கலம் ஊராட்சியில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதால் கால்நடை மருந்தகம் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்குமேல் இருந்தால் முதலில் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்க இயலும். பின்னர் கால்நடை அலகுகள் 5,000-க்குமேல் ஆகும்போது அந்தக் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள சணமங்கலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான திருப்பத்தூர், மணியாங்குறிச்சி, வாழையூர் ஆகியவற்றில் மொத்தம் 1,137 பசு இனங்களும், 4,700 ஆட்டு இனங்களும் மற்றும் 1,300 கோழி இனங்களும், ஆக மொத்தம் 1,600 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் காவல் தெய்வம் அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். அம்மா*

2019 பிப்ரவரி 13]

அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் எங்கள் அண்ணன், இந்த நாட்டின் மன்னன் கொங்கு மண்டலம் தந்த தங்கம், கொங்கு நாடு கண்டெடுத்த சிங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் அண்ணன் அவர்களை வணங்குகின்றேன். தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக ஒருங்கிணைப்பாளர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சணமங்கலம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் ஏராளமான மேய்ச்சல் நிலங்கள் உள்ளதால் அங்குள்ள மக்கள் கால்நடை வளர்ப்பை முதன்மைத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிறுகனூர் அல்லது எதுமலைக்குச் செல்லவேண்டியதுள்ளது. அந்தச் சுற்றுவட்டாரத்தில் சுமார் 1,500 ஆடுகளும் 5,000 கறவை மாடுகளும் உள்ளன. இங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுவதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சணமங்கலம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூர் தொகுதியில் சுமார் 42,000 மாட்டினங்கள், 68,000 ஆட்டினங்கள் மற்றும் 2,75,000 கோழியினங்கள் உள்ளன. இவற்றுக்கு மருத்துவ வசதிகள், சேவைகள் வழங்கிட 15 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 3 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மேலும் அரசாணை எண் 200, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 10-10-2018-ன்படி, மணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட திருப்பஞ்சீலி கிராமத்தில் இயங்கி வந்த கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம்*

உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சணமங்கலம் கிராமத்தில் அதிகளவிலே கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கருத்திலேகொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் முதலிலே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூரில் 1970-ல் ஆரம்பிக்கப்பட்ட கால்நடை மருந்தகம் இன்றளவும் தரம் உயர்த்தப்படாமல் அப்படியே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மணச்சநல்லூர் கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தரமுயர்த்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

தென்னை ஆராய்ச்சி மையம்

***27161—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—